திரு. ஏ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான மூலப்பொருள்கள் நம் மாநிலத்தில் எங்கே மிகுதியாகக் கிடைக்கின்றன? இராமநாதபுரம் மாவட்டத்தில் மூலப்பொருள்கள் அதிகமாகக் கிடைக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான மூலப்பொருள்கள் பெறுவதிலே சங்கடம் எதுவும் இருக்காது. காரணம், இது ஒரு ரசாயனத் தொழிற்சாலை. இதை முன்நின்று நடத்த, தனியார் ஒருவர் முன்வந்து இருக்கிறார். அவரிடத்தில் இது ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. பின்தங்கிய பகுதியில் ஆரம்பித்தால் மத்திய அரசாங்கம் உதவி கொடுக்கிறது. ஆகவே, அந்த இடத்தில் இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்கத் தேர்ந்தெடுத்து இருக்கிறோம்.

திருப்பூர் வழக்கறிஞர்கள் சங்கத்திலிருந்து முறையீடுகள்

* 233 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வழக்கறிஞர்கள் சங்கச் சார்பில், திருப்பூர் வழக்கறிஞர்கள் தங்குமிடத்தை (Bar Association Room) விரிவுபடுத்தித் தரவேண்டும் எனக்கேட்டு விண்ணப்பம் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இது பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, சட்ட அமைச்சர் அவர்கள் திருப்பூர் வழக்கறிஞர்கள் தங்குமிடத்தைப் பார்த்து இருக்கிறார்கள். அது மோசமான நிலையில் இருக்கிறது. அதை விரிவுபடுத்திப் புதிதாக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்களும் அப்போது என்னருகில் இருந்தார்கள். இப்படிப்பட்ட முயற்சிக்கு வழக்கறிஞர்களிடமிருந்து நிதி திரட்டலாம் என்று சொன்னதாக நினைவில் இருக்கிறது. அதைச் செய்து கொடுத்தால், இதையும் பரிசீலிக்கலாம்.

நொய்யல் ஆற்றிலிருந்து பிரியும் வாய்க்கால்கள்

* 234 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நொய்யல் ஆற்றில் இருந்து (திருப்பூர் வட்டாரம்) ஆண்டிபாளையம் குளத்திற்கும், முதலிபாளையம் குளத்திற்கும் இடையே வாய்க்கால்களை தூர் எடுத்து, ஆழப்படுத்தும் வேலை அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலைகள் துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

1971 ஜூலை 14]

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, இதிலே குறிப்பிடப் பட்டு இருக்கும் முதலிபாளையம், ஆண்டிப்பாளையம் குளங்களுக்கு நொய்யல் ஆற்றிலிருந்து தண்ணீர் வருகிற முறையில் தூர் எடுக்கப்பட்டால், அது விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பயன்படும். அதைச் செய்ய ஆசாங்கம் முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: எனக்குக் கொடுக்கப்பட்டு இருக்கும் விவரப்படி, அண்மையில்தான் மராமத்து வேலை செய்யப்பட்டிருக் கிறது. எனவே, அந்த வேலை தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

பவானி வட்டத்திலுள்ள வாய்க்கால்கள்

* 235 வினா—**திரு. ஏ. எம். இராஜா:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

பவானி வட்டத்திலுள்ள தடப்பள்ளி வாய்க்கால், அரக்கன்கோட்டை வாய்க்கால், காலிங்கராயன் வாய்க்கால் ஆகிய மூன்றையும் புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, இந்த தடப்பள்ளி வாய்க்கால், அரக்கன்கோட்டை வாய்க்கால், காலிங்கராயன் வாய்க்கால் ஆகிய மூன்றையும் புதுப்பிக்கும் திட்டம் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அது எப்போது செயல்படத் தொடங்கும்? அதனுடைய மொத்த மதிப்பீடு எவ்வளவு? அதனால் மீதமாகும் தண்ணீர் எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, அரக்கன் கோட்டை வாய்க்காலுக்கான மதிப்பு ரூ. 49.4 லட்சம் தடப்பள்ளி வாய்க்கா லுக்கான மதிப்பு ரூ. 88 லட்சம் காலிங்கராயன் வாய்காலுக்கான மதிப்பு ரூ. 66.01 லட்சம் ஆய்வு முடிந்தபிறகு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப் படும். எவ்வளவு ஆயக்கட்டு பயன்பெறும் என்று இப்போது சொல்வது அவ்வ ளவு சரியில்லை என்று கருதுகிறேன்.

திரு. ஏ. எம். இராஜா: இப்போது இந்த வாய்க்கால் வெட்டி சுமார் 200 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. வாய்க்கால்கள் தூர் எடுக்கப்படாமல் இருக்கின் றன. இதனால் கடைநிலைப்பகுதிகளுக்குத் தண்ணீர் வருவது இல்லை. ஆகவே, இதை விரைவாகச் செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைமைப் பொறியாளரை ஒரு விரிவான அறிக்கை கொடுக்கவேண்டுமென்று அரசு கேட்டு இருக்கிறது. தலைமைப்பொறியாளரின் ஆய்வில் அது இருக்கிறது. ஆய்வு முடிந்து அறிக்கை வந்தவுடன், தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, நொய்யலாற்றுப் பாசனம் கரூர் தாலுக்காவில் இருக்கும் விவசாயிகள் பல நாட்களாக கேட்டுக்கொண்டு இருக் கிறார்கள். அமைச்சர் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக அரசாங்கம் என்ன பரிசிலனை செய்து இருக்கிறது?